
# கலீல் ஜிப்பரானும்

## வேதாத்திரி மகரிஷியும்





அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே......


1. கலீல்ஜிப்ரானும் வேதாத்திரிய மகரிஷியும் ஒப்பாய்வு.
2. நீயார் ? நீயார் ? நீயார் ?
3. பலர் கருத்தும் கவிஞனின் அறிவில் பிரதிபலிக்கும்
4. ஆராந்து நட்பு கொள்
5. உண்மை நிலையறிய ஒத்த வழி எது ?
6. அன்பு சிறந்த பண்பாடு
7. மன அமைதிக்கு மனத்தூய்மை வேண்டும்.
8. எண்ணங்களைக் கொண்டே இப்போதைய வாழ்வு அமைந்துள்ளது
9. வாழ்க்கை என்பது வாய்ப்புகளின் தொகுப்பு
10. நம்பிக்கையே வாழ்க்கை
11. உழைப்பே உயர்வு
12. வறுமையும் அறியாமையும்
13. இன்ப துன்ப நிகழச்சிகள்
14. செயலுக்குத்தான் விளைவு
15. மனதில் ஒளி வீச வேண்டுமா ?
16. ஆன்மாவும் அங்கமும் நலம் பெற
17. எதிரிகளிடமும் அன்பு செலுத்துங்கள்
18. நம் குழந்தைகளே
19. மதம் மதம் மதம்
20. நல்ல மனப்பான்மை பெற
21. வாழ்க்கையும் மரணமும்

இயற்கை தனது அரசாட்சியில் ஏதோ ஒரு கட்டத்தில் மனிதனின் துணையை நாடத்தான் வேண்டியிருக்கிறது.

மானுடத்தை வழிநடத்த, பாட்டுவடிவில் சில கவிஞர்களை இயற்கை தேடியது. அப்படி வந்தவர்கள் தான் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களான, படைப்பாளிகளான கலீல் ஜிப்ரானும் வேதாத்திரி மகரஷியும்.

இயற்கை, தானே ஆச்சரியப்பட்டுக் கொள்ளும் வகையில், இந்த கவிஞர்கள் தங்களது கவிதை வரிகளில் இந்த தரணியையே தட்டி எழுப்பினார்கள்.

கலீல் ஜிப்ரான் ஒரு லெபனானிய அமெரிக்கர்.

கவிதை, எழுத்து, ஓவியம், சிற்பம் மற்றும் தத்துவம் ஆகிய துறைகளில் புலமைப் பெற்று, பல்துறை வித்தகராக விளங்கினார்.

வேதாத்திரி மகரிஷி ஒரு தென்னிந்திய தத்துவஞானி, எழுத்து, கவிதை மற்றும் தத்துவம், மெய்யியல் ஆகிய துறைகளில் புலமை பெற்று பல்துறை வித்தகராக விளங்கினார்.

கலீல் ஜிப்ரான் என்று அழைக்கப்பெற்ற ஜிப்ரான் கலீல் ஜிப்ரான், ஜனவரி 6, 1883 பிறந்தார்.. 1931 ஆம் ஆண்டு, காசநோய் மற்றும் கல்லீரல் பாதிப்புகளால் உடல்நலக்குறைவால் தன்னுடைய 48 வது வயதில் மரணமடைந்தார்.

வேதாத்திரி மகரிஷி 14.8.1911 ல் பிறந்தவர். 95 ஆண்டுகள் வரை வாழந்து 28.03.2006 ல் மறைந்தார்.

அமெரிக்காவும், ஐரோப்பாவும் அவ்வபோது பலரைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கொண்டாடி வருகிறது.

சிறந்த அறிவாளி, உயர்ந்த சிந்தனையாளர். துலைசிறந்த ஓவியர். நிகரில்லா இசையமைப்பாளர். பிறவிக் கவிஞர்கள் என்றெல்லாம் சிலரை உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவருகிறது.

அந்தவகையில், கலீல் ஜிப்ரான் ஒரு சிறந்த சிந்தனாவாதி, கவிஞர், எழுத்தாளர் என்பதில அவர்களைப் போலவே நமக்கும் உடன்பாடுதான். அதை யாருமம மறுப்பதற்கிறல்லை.

கலீல் ஜிப்ரான் பஷ்சி நகரில் பிறந்து, சிறுவயதில் 1895 இல் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு அவரது தாய், சகோதரி, சகோதரன் ஆகியோருடன் குடிபெயர்ந்து, அங்கேயே கலை கற்று தன்னுடைய இலக்கியப் பணியை துவங்கினார்.

அரபு மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் தன்னுடைய படைப்புகளை கொடுத்தார்.

நவீன அரபு இலக்கியத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். இவரது புத்தகங்கள் விற்பனையில் மிகச்சிறந்த இடத்தை பெறுவது குறிப்பிடத்தக்கது.

வேதாத்திரி மகரிஷி ஆன்மீகத் துறையில் ஒரு புரட்சியை எழுச்சியை ஏற்படுத்தினார்.

இருவருமே இணையற்ற ஆன்மீக மேதைகள்.

வாழ்க்கை தத்துவத்தை எளிமையாக எடுத்துணர்த்தும் கலில்ஜிப்ரானின் தத்துவ விளக்கங்கள்/ கவிதைகள் ஏராளம். வேதாத்திரியம் முழுவதுமே வாழ்க்கைத் தத்துவங்கள்தான்

1895–லிருந்து கலீல் ஜிப்ரானின் கல்வி தொடங்கியது. ஓவியக் கல்வியும் பயின்றார்.

வேதாத்திரி மகரிஷி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்பு வரைதான் பயின்றார்..பின்னர் ஒரு ஆசிரியரிடம் ஆங்கிலம் பயின்றார்.

1905 முதல் அரபி மொழியில் எழுதிவந்த கலீல் ஜிப்ரான், ஆங்கிலத்திலும் எழுதினார்.

1918–ல் அவர் எழுதிய ‘தி மேட்மேன்’ எனும் ஆங்கிலக் கவிதைகளின் தொகுப்பு வெளியானது.

1923 இல் ஜிப்ரான் வெளியிட்ட ‘தீர்க்கதரிசி’ (தி ப்ராஃபெட்) எனும் தத்துவப் படைப்பு அவரது படைப்புகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

அந்தப் புத்தகத்தை எழுதிய கலீல் ஜிப்ரானின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் மிகைல் நேமி,

கலீல் ஜிப்ரானைச் சிறு வயதிலிருந்து காப்பாற்றி வந்த நண்பர் மிகைல் நேமி.

தன் நண்பனின் சாதனைப் படைப்பான ‘தீர்க்கதரிசி’யை மிஞ்ச வேண்டுமென்று அவர் எழுதியதுதான் ‘மிர்தாத்தின் புத்தகம்’.

வேதாத்திரி மகரிஷி எழுதியது, பேசியது, பாடியது அனைத்தும் ”வேதாத்திரியம்”. இன்று உலகெங்கும் உலா வந்து கொண்டிருக்கிறது.

உலகில் மனித குலம் சிறப்பாக வாழ, உண்மை நிலை உணர்ந்து உயர்வான வாழ்க்கை நெறிமுறைகளைக் கண்டு அனுபவித்து, அதன் வழி வாழ்ந்து மற்றவரும் சிறப்பாக, அமைதியோடு வாழ வழிகாட்டியவர்கள் பலர்.

அவர்களில் அறிஞர்கள், தத்துவ மேதைகள், விஞ்ஞானிகள், மெய்ஞானிகள் அனைவரையும் நினைவு கூர்ந்து, வாழ்வியல் சிந்தனைகள், செயல் திட்டங்களை, மனித குலம் எளிமையாக புரிந்து கொண்டு, உணர்ந்து வாழ அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி எனும் வள்ளல் அருளிய அரிய கொடைதான் வேதாத்திரியம்.

வேதாத்திரி மகரிஷி சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள் ஞானக்களஞ்சியமாக உலகில் உலா வந்து கொண்டிருக்கின்றன.

80க்கும் மேற்பட்ட உரைநடை நூல்களையும் மானுடத்திற்கு தந்துள்ளார் மகரிஷி..

உலகெங்கும் உள்ள அறிவுத்திருக்கோயில்களிலும், மனவளக்கலை மன்றங்களிலும் ஏன் சுமார் 30 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் வேதாத்திரியம் பாடத்திட்டமாகப் போதிக்கப்பட்டு வருகிறது.

தற்போது இணையம் வழியாக ஆன்லைன் வகுப்புகளிலும் வேதாத்திரியம் பயிற்றுவிக்கப்படுகிறது. ( vethathiriam for Wordld Peace - YouTube · SKY Yoga TV)

இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில:

1. வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2. வாழ்வியல் விழுமியங்கள்
3. பிரம்மஞான சாரம்
4. நான் யார் ?
5. ஞானக்களஞ்சியம்

கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

அன்பொளி என்னும் ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த வேதாத்திரி மகரிஷியின் உள்ளத்தில் வறுமை என்றால் என்ன ? கடவுள் என்பது எது ? அதை ஏன் காண முடியவில்லை ? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார்.

அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

46 ஆம் அகவையில் உலக அமைதிக்காக 'உலக சமாதானம்' றுடிசடன யீநயஉந என்ற 200 பாடல்கள் நூலை எழுதி 1957ல் வெளியிட்டார்.

இந்த இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) நூலை பாடத்திட்ட வழி பள்ளி, கல்லூரிகளில் பரப்ப வாழ்நாள் இறுதிவரை உழைத்து வெற்றி பெற்றார். இன்று பல பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

# நீ யார்? நீ யார்? நீ யார்?

Only once have I been made mute. It was when a man asked me, ”Who are you?” கலீல் ஜிப்ரான்

’’ஒரே ஒரு முறை தான்

பேச்சற்றுப் போனேன் நான் .

அது

’நீ யார்’ என ஒரு மனிதன்

கேட்ட போது ! ’’ கலீல் ஜிப்ரான்

’’நீயார்’’ என ஒரு மனிதன் கேட்டபோது பேச்சற்றுப் போன கலீல் ஜிப்ரானின் மனதில் இருந்ததை வார்த்தைளாக, பாடல்களாக வேதாத்திரியம் தருகிறது. எப்படி **?**

‘‘மலரே மலரே நீ யார் உன்
மணமும் அழகும் வண்ணமும் என்
பலவாறான நினைவகற்றி
பார்க்க உன்னில் ஆழ்ந்து விட்டேன்

இயற்கையழகை இரசிக்கும் உன்
எண்ணம் மிகமிக உயர்ந்துளது
செயற்கை மயக்கம் தெளிந்தறிவு
செம்மைபெற என் கதை சொல்வேன்

மலலே நீ யார் **?** எனக் கேட்டாய்
மறை பொருளான தெய்வமே நான்
சிலலே அறிவார் இவ்வுண்மை
சிந்தனை செய்ய வல்லவர்கள்

பரம அணுக்கள் பலகோடி
பண்பாய்க்கூடி ஒரு கூத்து

கரம் கோர்த்தாடும் நாடகத்தோர்
கட்டம் எந்தத் தோற்றமும் ஆம்

இறைவன் என்ற ஆதிபரம்
எடுத்த பலபல கோடி உரு
நிறைந்த பெரிய மண்டலமே
நெடிய விரிந்த பேரண்டம்

பெரிய இயக்க மண்டலமாம்
பிரபஞ்சம் எனும் மேடையிலே
அரிய உருவ அழகோடு
ஆடுகின்றேன் நான் அவன் கதையாய்

ஆதியின் அசைவே பரமாண
அவைஒவ்வோர் அளவில்கூட
வேதம் கூறும் ஐம்பூதம்
விண்முதல் மண்வரை வேறில்லை

ஒவ்வொரு பொருளும் பரமுதலாய்
அவ்வுரு வரையில் வந்தகதை
செவ்விய சிறுசொல் பரிணாமம்
சிறப்பை உணர்வாய் நீயுமதே.

என்னைக் கண்ணால் பார்மலராய்
எனதமைப்புஉணர அணுக்கூட்டே
முன்னம் பரமே அணுவாச்சு
மூலம் சிவமாம் பிரம்மமதே.

உருவம் மலர்தான் உட்பொருளை
உணர விண்ணெனும் நுண்ணணுவே
அருவம் ஆதி அசைந்ததில்லை
அணுமுதல் அகண்ட பேரண்டம்

உன்னை யாரென்றேன் மலரே
உணர்த்திவிட்டாய் உண்மைப் பொருள்
பின்னை இந்தப் பேரறிவில்
பிறழா திருப்பேன் விழிப்புடனே.

ஆறறிவாக வாழ் மனிதர்
அதற்கு ஏற்ப பொருத்தமுள
பேறு உண்மைப் பொருளுணர்தல்
பிறவிப் பயனைப் பெற்று விட்டேன். (ஞாக.பா.1649)

நாம் பிறந்தோம் எப்படிப் பிறந்தோம் ? தாய், தந்தை என்ற இருவருடைய கருவும் ஒன்று கூடி ஒவ்வொருவரும் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறோம்.

அந்தக் கரு என்ற ஒன்றிலேதான் தந்தையின் உயிரும், தாயாருடைய உயிரும் உள்ளன.

இந்த இரண்டு உயிரும் ஒன்று சேர்ந்து அந்த தாய் தந்தை என்ற விந்து – நாதம் என்ற கருவிலே உள்ள உயிரும் ஒன்று கூடி ஒரே உருவமாக பரிணமித்து அது தாயின் வயிற்றிலே உருவடைந்து ஒன்பது மாதமும் சில நாட்களும் சென்ற பிறகு உடல் வடிவம் பூர்த்தியாகி வெளிவருவது எல்லோரும் அறிந்ததே.

அந்த உயிரானது எங்கேயிருந்து வந்தது ? என்பதை ஆராய்ந்தோமேயானால், தாய், தந்தை இருவரிடமிருந்துதான் வந்திருக்கிறது.

அந்த உயிரானது, கருவளரும் காலத்திலேயே ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் நுழைந்ததில்லை. ஆரம்பத்திலேயே அந்த உயிர் இருக்கிறது.

அந்த உயிர் எம்மாதிரியான உருவம் எடுக்க வேண்டுமோ, இது வரையில் என்னென்ன பதிவுகள் கருவின் மூலம் ஏற்பட்டு உள்ளனவோ, இவை அத்தனையும் அடக்கம் பெற்றதுதான் உயிர்.

அந்த உயிர், தாய், தந்தை இருவருடைய உயிரும் ஒன்று சேர்ந்து உருவாகி, உடலாகி வெளியே வந்தது. உடலைக் கட்டும்போது அந்த உயிருக்குப் பேரறிவு இல்லை.

புலன்கள் இல்லை. தன்னிடத்திலேயே உள்ள பதிவுகள் காரணமாக நீண்ட காலத் தொடராக பல தலைமுறைகளில் தொடர்ந்து வந்து எல்லா இயக்கங்கள், பதிவுகள் காரணமாக அவற்றுக்கேற்றவாறு உடலைக் கட்டிக் கொண்டு வெளியே வந்து விட்டது.

வந்த உடனே புலன்கள் இயங்கத் தொடங்கின அந்தப் புலன்கள் மூலமாக இந்த உடல் வரையிலே உயிர் எல்லை கட்டிக் கொண்டது.

பேரறிவின் நிலையில் இந்த உயிருக்கு நீண்ட காலத் தொடரான ஒரு நீளம் உண்டு. அதேபோன்று இந்த உயிர் இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிறது என்றால் சில அணுக்கள் வெளியேறிக் கொண்டேயிருக்க சில உயிரணுக்கள் நமக்கு வந்து கொண்டேயிருக்கிறன.

அதாவது உணவின் மூலம், கோள்களினுடைய காந்த சக்தியின் மூலம், இன்னும் காற்றின் மூலம், பூமியினுடைய அடித்தளத்தில் இருந்து வந்து கொண்டிருக்கக்கூடிய சக்தியின் மூலம் உயிரணுக்கள் சேர்ந்து கொண்டேயிருக்கின்றன.

நமது உடல் இயக்கம் பெறுவதனாலும், மனதை இயக்குவதனாலும் உயிரணுக்கள் ஓரளவு செலவாகிக் கொண்டே இருக்கின்றன.

இவற்றுக்கிடையே இந்த உடலையும் மனதையும் நடத்துவதற்கு குறைந்த பட்ச அளவு எப்பொழுதுமே இருந்து கொண்டே இருக்கிறது.

இப்போது முன் பிறவி என்ன ? என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு பார்த்தோமேயானால், ஒவ்வொருவருக்கும் தந்தையும் தாயும்தான் முன் பிறவி.

அவர்களுக்கு முன் பிறவியோ அவர்களுடைய தந்தையும் தாயும். இவ்வாறு பின்நோக்கி சென்று கொண்டே போனோமேயானால் முதன் முதல் உலகிலே மனிதன் தோன்றினானே அவனிலே இருந்துதான் நாம் எல்லோரும் வந்திருக்கிறோம் என்பது விளங்கும்.

அதற்கு முன்னதாக பரிணாமத் தொடராக எடுத்து ஆராய்ந்து பார்த்தோமேயானால், பல உயிரினங்கள் தொடர்பாக ஐயறிவு, நாலறிவு, மூவறிவு, ஈரறிவு, ஓரறிவு ஆகிய தாவரம், அதற்கு முன்னதாக அணு, பரமாணு, பரமாணுவுக்கு அடித்தளமாக உள்ள இறைநிலை அந்த மெய்ப்பொருளிலிருந்து இன்று வரையில் நம்முடைய இயக்கத்தில், வளர்ச்சியில் உயிரின் நிலையிலே எங்குமே விடுபட்டதில்லை; ஒரு தொடரியக்கமாகவே வந்து கொண்டிருக்கிறது.

அதுதான் இப்பொழுது நமது உயிர். அதுதான் பிறப்புக்கு மூல காரணம்.

இறைநிலையிலிருந்துதான் ஒவ்வொரு தாவரமும் வந்தன. ஒவ்வொரு உயிரும் வந்தன.

ஒவ்வொரு மனிதனும் வந்தான் என்று அறிந்துகொள்ளும்போது மனிதன் தேவையின்றித் தாவரங்களை அழிப்பதையோ, பிற உயிர்களுக்குத் துன்பம் செய்வதையோ, மனித உயிருக்கும் மனதுக்கம் துனபம் செய்வதையோ நீதி என்று கொள்ள முடியாது. இறையாற்றலுக்கு முரணானது. இறைநியதிக்கு முரணானது.

எனவே யாருக்கும் உடலுக்கும் மனதுக்கும் துன்பம் செய்ய மாட்டேன், துன்பப்படுபவர்களுக்கு என்னாலான உதவியைச் செய்வேன்.

அவனில்தான் நீ உன்னில் அவன்,

அவன் யார் நீயார் பிரிவேது **?** **(**ஞாக.பா.**2)** வேதாத்திரி மகரிஷி

மூக்கடலை குழம்பு வைப்பதற்காக கடலையை தண்ணீரில் ஊறவைப்பார்கள். அப்போது பார்த்தால் கடலையும் தண்ணீரும் தனி தனியாக இருக்கும்.

மறுநாள் காலையில் பார்த்தல், தண்ணீரில் கடலை இருக்கும். கடலையை (அழுத்தி) பார்த்தால் அதற்குள் தண்ணீர் இருக்கும்.

தண்ணீருக்குள் கடலை! கடலைக்குள் தண்ணீர். இதுபோல்தான் எல்லாத் தோற்றப் பொருள்களும், உயிர்களும் இறைவனுக்குள் இருக்கின்றன!

இறைவன் அனைத்துக்குள்ளும் இருக்கிறான். இதுவே உண்மை. இறைவனுக்குள் நாம் இருக்கிறோம். நமக்குள் இறைவன் இருக்கிறான்.

இது பிரிக்க முடியாத பந்தம். இதை உணர்ந்தவர்கள்

மகான்கள். ஞானிகள். இதுவே அத்வைத்த தத்துவம்.

இதையே கலில் ஜிப்ரான் கவிதையும் வேதாத்திரியத்தில் பாடலும் விளக்குகிறது.

பலர் கருத்தும் கவிஞனின் அறிவில் பிரதிபலிக்கும்.

"Poetry is not an opinion expressed. It is a song that rises from a bleeding wound or a smiling mouth." - கலீல் ஜிப்ரான்

கவிதை என்பது கருத்தல்ல , அது குருதி வழியும் காயத்திலிருந்தோ புன்னகை புரியும் உதடுகளிலிருந்தோ உதயமாகிறது – கலீல் ஜிப்ரான்

''பாட்டெழும் பழக்கமுளான், அறிவு நன்றாய்ப்
பண்பட்டுப் பற்றற்ற நிலையடைந் தால்,
நாட்டு மக்கள் தேவைஅவன் அறிவில் தோன்றும்,
நல்வாழ்வுக் கேற்றமுறை அனைத்தும் தோன்றும்.
மேட்டுளநீர் பள்ளம்போயச் சேர்தல் போல,
மேதினியோர் ஆராய்வும் முடிவும் தோன்றும்.
ஏட்டினிலே கை, எண்ணம் அகண்டா காரம்.
இயற்கைரக சியம் மலர்ந்து, எழுத்தாய் மாறும்.'' (ஞாக.பா.489)

# மனித வாழ்வின் இலட்சியம்

மனிதனுக்கு பெருமை அவன் எதை அடைகிறான் என்பதில் இல்லை.... அவன் எதை அடைய விரும்புகிறான் என்பதில் தான் உள்ளது! கலீல் ஜிப்ரான்

- ◈ என்னுடைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் என்னுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. நான் மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்வது என்பதை என்னால் தீர்மானிக்க முடியும். என்னுடைய எதிர்காலத்தை உருவாக்கவும், இலக்கை அடையவும் அது எனக்குப் போதும். –வேதாத்திரியம்

ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதன் வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும். இயற்கையின் முழுமையை உணர வேண்டும்.




எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றிவந்து இயங்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுதான் பிறப்பின் நோக்கம்

சுருங்கச் சொன்னால் இயற்கையானது பல படித்தளமான பரிணாம இயக்கத்திலே தோற்றங்களாகி, ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவு வரையிலே வந்து மனிதனாகி, தன்னுடைய மதிப்பையும், தன்னுடைய தகைமையையும், தன்னுடைய அழகையும் ரசிக்கவும், உணரவும் அந்த இயற்கையே எடுத்துக் கொண்ட ஒரு உன்னதமான வடிவம் எதுவோ அதுதான் மனிதன்.

மனிதனில் தான் அறிவினுடைய முழுமையைப் பெற முடியும்!

பழக்கத்தின் வழியே நாம் சிக்கி, தேவை, பழக்கம், சூழ்நிலையின் கட்டாயம் (நிர்பந்தம்) இந்த மூன்றினாலும் உந்தப்பட்டுச் செயல் செய்து கொண்டிருக்கிறோம்.

இவற்றிலிருந்து விளக்கம் பெற்று, விளக்கத்தின் வழியே நாம் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமானால் உடனடியாக விளக்கம் வராது, பழக்கத்திலிருந்து உடனடியாக மாறி விடவும் முடியாது. முறையான பயிற்சி வேண்டும். விளக்கத்திலேயும் பயிற்சி வேண்டும்.

அப்படி விளங்கிக் கொண்ட பிறகு நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போக வேண்டும், அதிலுள்ள வேறுபாடு, தூரம் என்ன என்பதைக் கண்டு, படிப்படியாகத் தன்னை மாற்றி உயர்த்தி அந்த இடத்தை அடைய வேண்டும். அத்தகைய திருப்பம் எதுவோ அது தான் பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் எனப்படும் ஆன்மீக வாழ்வு ஆகும். – வேதாத்திரி மகரிஷி

# ஆராந்து நட்பு கொள்

நட்பு எப்போதும் ஒரு இனிமையான பொறுப்பே தவிர அது ஒருபோதும் வாய்ப்பு அல்ல. கலீல் ஜிப்ரான்

''நட்புக்கோர் நோக்கமுண்டு. நாடுபவர் தரம் ஒக்கும்.
கட்புலனுக் கெட்டாது, கருத்தை ஊன்றிக் காண்பீர்!
உட்பகையைச் சுயநலததை உள்வைத்தும் நடிப்பார்கள்
நுட்பமுடன் ஆராய்நது. நோதல்தவிர்த் தே வாழ்வோம்.'' (ஞாக.பா.340)

# உண்மை நிலையறிய ஒத்த வழி எது?

உண்மைக்கு மட்டுமே பணிந்து செல்லுங்கள், கலீல் ஜிப்ரான்

''கும்பிடுதல் பொருட்கள்பல கொடுத்தல் இவை இரண்டிற்கே
குருதெய்வ நாட்டமுடன் கூடி அலையும் உலகீர்!
வம்புகளை வளர்க்கின்றீர்! வாழ்வைப் பழாக்கு கின்றீர்!
வாரீர்! அறிவைஅறிந்திவ் வழிஒழுகி உயர்வடைவீர்! (ஞாக.பா.1342)

- அறிவுக்கு மேன்மை நிலையென்றும் உண்மை நிலையென்றும் இருநிலைகள் உண்டு. புலன்கள் மூலம் உணர்ச்சிகளாக, இன்பதுன்ப அனுபவங்களாக உலகை அறிகிறோம். இது புற அறிவாகும். அறவின் படர்க்கை நிலையான மனமாக இயங்கும் நிலை இது. ஈதுவே மேன்மை நிலை. மனதின் உட்பொருளாக உள்ள அறிவுதான் மெய்பொருள் எனும் உண்மையறிவு. உள் என்ற சொல்லைக் கொண்டு உள்மை உண்மை என வழங்கப்படுகிறது. – வேதாத்திரியம்
- உண்மை நிலைக்குப் போனால் அங்கே இருக்கிறதெல்லாம் சிவம்தான். பேரறிவுதான். அதனால்தான் நான் அடிக்கடி சில இடங்களில் எழுதியிருக்கிறேன். மனதின் மறுமுனை கடவுள் என்று – வேதாத்திரியம்.
- உண்மையை (இறைநிலையை) உணராவிட்டால் எவ்வளவுதான் இன்பங்களை மனிதன் அனுபவித்துக் கொணி ?டிருந்தாலும் அவன் மனத்திலே நிறைவு இராது.

# அன்பு சிறந்த பண்பாடு

அழகை மட்டுமே பின்பற்றுங்கள், அன்பிற்கு மட்டுமே கீழ்படியுங்கள்.

அன்பு இல்லாத வாழ்க்கை என்பது, பூக்கள் அல்லது பழங்கள் இல்லாத மரத்தினைப் போன்றது. கலீல் ஜிப்ரான்

''அன்பிரக்கம், தொண்டு, தவம், ஈகை, இன்சொல்,
ஆன்மீக நெறியாகும். போற்றிக் காக்க
துன்பங்கள் குறைந்துவரும். மேலும், தெய்வத்
துணைகிட்டும். வாழ்வில் புகழ் நிறைவு ஓங்கும்.
நன்முறையில் தனிமனிதன் வாழக்கற்றால்

நாட்டினிலும் வீட்டினிலும் அமைதி ஓங்கும்.
இன்ப மயமே எங்கும்! இந்த உண்மை
எளிதன்றோ ? கற்பதற்கும் வாழ்வ தற்கும்.'' (ஞாக.பா.340)

மன அமைதிக்கு மனத்தூய்மை வேண்டும்.

உன் உள்ளம் எரிமலையாகப் பொங்கினால் உன் உள்ளங்கையில் எப்படி மலர்கள் பூக்கும் ? கலீல் ஜிப்ரான்

ஒரு பணக்காரனுக்குத் தோட்டமொன்று இருந்தது. அதில் இரண்டு தோட்டக்காரர்கள் இருந்தார்கள்.

ஒருவன் சோம்பேறி, வேலையே செய்ய மாட்டான். ஆனால் எஜமான் தோட்டத்துக்கு வந்தால் போதும். உடனே எழுந்து போய் கூப்பிய கைகளுடன் அவரிடம், ''ஓ, என் எஜமானின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது'' என்று புகழ்பாடி அவர் முன்னால் பல்லை இளித்துக் கொண்டு நிற்பான்.

மற்றவன் அதிகம் பேசுவதே இல்லை, ஆனால் கடினமாக உழைப்பான். பலவகையான பழங்களையும் காய்கறிகளையும் சாகுபடி செய்து, நெடுந்தொலைவில் வசிக்கின்ற அந்த எஜமானின்  ன் வீட்டிற்குச் சுமந்து கொண்டு செல்வான்.

இந்த இரண்டு தோட்டக்காரர்களுள் யாரை எஜமான் அதிகம் விரும்புவார் ?

சிவபெருமான்தான் அந்த எஜமான். இந்த உலகம் அவரது தோட்டம். இங்கே இரண்டு வகையான தோட்டக்காரர்கள் இருக்கிறார்கள்.

ஒருவகையினர் சோம்பேறிகள், ஏமாற்றுக்காரர்கள். அவர்கள் எதுவும் செய்வதில்லை; சிவபெருமானின் அழகான கண்களையும் மூக்கையும் மற்ற குணநலன்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஏழைகளான, பலவீனர்களான எல்லா மனிதர்கள், விலங்குகள் மற்றும் அவருடைய படைப்பு அனைத்தையும் மிகுந்த கவனத்தோடு பராமரிப்பவர்கள் மற்றொரு வகையினர்.

இவர்களுள் யார் சிவபெருமானின் அன்பிற்கு உரியவர்கள் ? நிச்சயமாக அவரது பிள்ளைகளுக்குச் சேவை செய்பவர்களே. தந்தைக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள் முதலில் பிள்ளைகளுக்குச் சேவை செய்ய வேண்டும்.

சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள், அவரது பிள்ளைகளாகிய இந்த உலக

உயிர்கள் அனைத்திற்கும் முதலில் சேவை செய்ய வேண்டும்.

கடவுளின் தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே அவரது மிகச் சிறந்த தொண்டர்கள் என்று சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை மனத்தில் கொள்ளுங்கள்.

மீண்டும் சொல்கிறேன்: மனத்தூய்மையுடன் இருங்கள், உங்களை நாடி வரும் ஏழைகளுக்கு உங்களால் இயன்ற உதவி செய்யுங்கள். இது நற்கர்மம். இதன் பலனாக உங்கள் இதயம் தூய்மை பெறும்.

எல்லோரிலும் உறைகின்ற சிவபெருமான் வெளிப்பட்டுத் தோன்றுவார். அவர் எல்லோரது இதயத்திலும் எப்போதும் இருக்கிறார். அழுக்கும் தூசியும் படிந்த கண்ணாடியில் நம் உருவத்தைப் பார்க்க முடியாது. அறியாமையும் தீய குணங்களுமே நம் இதயக் கண்ணாடியில் படிந்துள்ள தூசியும் அழுக்கும்.

நம் நன்மையை மட்டுமே நினைக்கின்ற சுயநலம், பாவங்கள் அனைத்திலும் முதற்பாவமாகும்.

'நானே முதலில் உண்பேன். மற்றவர்களைவிட எனக்கு அதிகமான பணம் வேண்டும், எல்லாம் எனக்கே வேண்டும்', 'மற்றவர்களுக்கு முன்னால் நான் சொர்க்கத்தை அடையவேண்டும், எல்லோருக்கும் முன்னால் நான் முக்தி பெறவேண்டும்' என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி.

சுயநலமற்றவனோ, 'நான் கடைசியில் இருக்கிறேன். சொர்க்கம் செல்வதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் நரகத்துக்குச் செல்வதால் என் சகோதரர்களுக்கு உதவ முடியுமானால் அதற்கும் தயாராக இருக்கிறேன்' என்கிறான்.

இத்தகைய சுயநலமற்ற தன்மையே மதத்திற்கான உரைகல். சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீகவாதி, அவனே சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான்.

அவன் படித்தவனாக இருந்தாலும் படிக்காதவனாக இருந்தாலும், அவன் அறிந்தாலும் அறியவில்லை என்றாலும் அவனே மற்ற அனைவரையும்விட சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான்.

சுயநலம் கொண்டவன் எல்லா கோயில்களையும் வழிபட்டிருந்தாலும், புண்ணியத் தலங்கள் அனைத்தையும் பார்த்திருந்தாலும், சிறுத்தையைப்போல் தன் உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் தீட்டிக் கொண்டிருந்தாலும் அவன் சிவபெருமானிடமிருந்து விலகியே இருக்கிறான்.(விவேகானந்தர் கதைகள்)

''பொருந்தும் இப்பிறப்பு இறப்பு இவை

நினையாது பொய்களே புகன்றுபோய்க்

கருங்குழல்லினார் கண்களால் ஏறுண்டு

கலங்கியே கிடப்பேனைத்

திருந்து சேவடிச் சிலம்பவை

சிலம்பிடத் திருவொடும் அகலாதே

அருந்து ணைவனாய் ஆண்டுகொண்டு

அருளிய அற்புதம் அறியேனே.'' (திருவாச.பா.572)

## மனத்துய்மை அடைந்தால் இறை இன்பம் வேதாத்திரியம்

''வினைத்தூய்மை பெறவேண்டின், மனத்தின் தூய்மை

வேண்டுவது இன்றியமை யாததாகும்.

வினைத்தூய்மை ஒழுக்கமுடன் கடமை, ஈகை,

விளங்கும் அறநெறி நிற்க விரைந்து ஓங்கும்.

வினைத்தூய்மை வித்தான மனத்தின்தூய்மை

விண்ணுணரும் அகத்தவத்தால் ஓங்கும் உய்ய.

வினைத்தூய்மை மனத்தூய்மை ஒன்றை ஒன்று

உயர்த்தி மனிதன் தெய்வமறியச் செய்யும்.'' (ஞாக.பா.1286)

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே

## எண்ணங்களைக் கொண்டே இப்போதைய

# வாழ்வு அமைந்துள்ளது

"உங்கள் எண்ணங்களுடன் சமாதானமாக இருப்பதை நிறுத்தும்போது நீங்கள் பேசுகிறீர்கள்". – கலீல் ஜிப்ரான்

- உங்களுடைய எண்ணங்கள் மீதே உங்கள் எண்ணங்களைக் கொண்டே இப்போதைய வாழ்வு அமைந்துள்ளது. இதை மாற்றி அமைக்கும் சக்தியும் உங்களிடம் உள்ளது. இதற்காக வெளியே எங்கும் அலை ?யாதீர்கள் உங்கள் மனதில் இருந்து மாற்றங்களைத் தொடங்குங்கள். அங்கே தான் அனைத்தும் பிறக்கிறது. மனதை பழக்க மனவளக்கலை பயிற்சி எடுக்கலாமே ? – வேதாத்திரியம்
- காந்தியின் எண்ண எழுச்சிதான் சுதந்திரம். தெரசாவின் எண்ண ஆக்கம்தான் தொண்டு. விவேகானந்தரின் எண்ணம்தான் ராமகிருஷ்ண மடங்கள். பன்னிரு சீடர்களின் எண்ணங்கள்தான் கிறிஸ்துவ மதம். வேதாத்திரி மகரிஷியின் எண்ணங்கள்தான் வேதாத்திரியம்.
- எண்ணங்களை மகிழ்வாக, சுகமாக, அன்பாக, பாசமாக, வைத்துக் கொண்டால் செடி, கொடி, மலர்கள், மிருகங்ளோடு ஏன் உயிரற்றவற்றோடு கூட பேசமுடியும். – வேதாத்திரியம்

வாழ்க்கை என்பது வாய்ப்புகளின் தொகுப்பு

"தனது நெஞ்சின்
கீதம் பாடும்
பாடகியைக்
காணாத போது,
அது தனது
மனதைப் பேசும் ஒரு
தத்துவ ஞானியைத்
தயாரிக்கிறது !"

– கலீல் ஜிப்ரான்

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என் அண்டைவீட்டுக்காரன் என்னிடம் சொன்னான் .. " நான் இந்த வாழ்க்கையை வெறுக்கிறேன்....இது வலி மிகுந்தது " நேற்று மயானம் வழியே சென்ற

பொழுது கவனித்தேன்.. அந்த அண்டைவீட்டுக்காரனின்

சமாதி மீது வாழ்க்கை நடனமாடிக்கொண்டிருந்தது.'' – கலீல் ஜிப்ரான்.




- வாழ்க்கை என்பது வாய்ப்புகளின் தொகுப்பு. வெற்றி சிகரத்தைத்தொடுவதற்கு நீங்கள்தான் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். உங்கள் கண் முன் ஆயிரமாயிரம் வாய்ப்புகள் இருக்கின்றன. பயன்படுத்தப்படும் வாய்ப்புகள்தான் பெருகும். – வேதாத்திரியம்
- வாழ்க்கை என்றால் உழைத்துக் கொண்டு இருப்பதுதான் என்பதை உணர்ந்து, அதற்கேற்றபடி செயல்பட்டு வருகிறீர்களா ? அப்படியானல், உங்கள் பாதம் பட்ட இடமெல்லாம் வெற்றி என்று ரோஜாச் செடிகள் நிச்சயம் முளைக்கும். – வேதாத்திரியம்
- ''எண்ணம் சொல் செயலால் எவருக்கும் எப்போதும் நன்மையே விளைவிக்க நாட்டமாக இருங்கள்'' இது வேதாத்திரியம்
- சாத்தியமானவற்றை சுறுசுறுப்புடன் நாம் சிந்திக்கின்ற போது நம்முடைய ஆழ்மனம் செயல்பட தீர்வுகளை உருவாக்கிக் கொடுக்கிறது. நமது நம்பிக்கை செயல்பாட்டுக்குத் தேவையான சக்தியை அளிக்கிறது. இத்தகைய சக்தியைத் தருவது மனவளக்கலை மன்றங்கள்.

## நம்பிக்கையே வாழ்க்கை

நம்பிக்கை என்பது சோதனைக்கு அப்பாற்பட்ட, இதயத்திற்குள் இருக்கும் ஒரு அறிவு.'' – கலீல் ஜிப்ரான்

வேதாத்திரியம் வழி எது ? உலக மக்கள் அனைவரும் ஏற்றிப் போற்றும் பொது நெறி.

மனித குலம் வாழும் வரை, எக்காலத்தும், எந்நாட்டினராலும், என்றும் போற்றப்படும் அறநூல், மறைநூல். ஒவ்வொரு மனிதனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வகுக்கப்பட்டது வேதாத்திரிய வழி.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி பேசியது எழுதியது பாடியது பயிற்சி அளித்தது வாழ்ந்தது அனைத்தும் அடங்கிய நூல் தான் வேதாத்திரியம் என்றழைக்கப்படுகிறது.

மனிதன் குறிக்கோளுடன், நல்ல இலட்சியத்துடன் வாழ வேண்டும் என்று நடைமுறைத் திட்டங்களை வகுத்து வாழ வழிகாட்டுவது வேதாத்திரியம். நம்பிக்கையைத் தருவது வேதாத்திரியம்.

பல்வேறு துறைகளில் வாழ்பவர்களுக்கும் அந்தந்தத் துறைக்கு ஏற்றாற்போல் அறவழி காட்டிடும் ஆன்றோர் வேதாத்திரி மகரிஷி. மன இருள் நீக்கி இன்பம் பயப்பது;

மருள் நீக்கி மாசறு காட்சி நல்குவது வேதாத்திரிய வழி. வேதாத்திரியத்திற்கு இணையாக ஒரு அமைப்பு இவ்வுலகில் இல்லை என்று மேலைநாட்டு அறிஞர்கள் எல்லாம் வியக்கின்றனர்; வேதாத்திரிய வழி வாழ வலியுறுத்து கின்றனர்.

மக்கள் அனைவரும் நாள்தோறும் நாடி வேதாத்திரிய வழியைப் பின்பற்றினால், உலகில் நிலவும் பல்வகைக் கொடுமைகளும், தீமைகளும் நீங்கி நன்மையும் இன்பமும் பெருகும்;

அல்லவை தேய அறம் பெருகும். தற்போது நாம் வாழும் காலத்தில் அமைதி குறைந்து பகைமையும் தீவிரவாதமும் பெருகி வன்முறைச் சம்பவங்கள் நம்மை அச்சுறுத்தும் வகையில் பெருகியிருக்கின்றன.

வேதாத்திரியத்தைப் பயின்றால், பகை நீங்கி மனித நேயம் மலரும். தன்னம்பிக்கை வளரும்

## முயற்சியே மூலதனம்

"ஒவ்வொரு விதையும்
ஒரு விடாமுயற்சியின்
உந்துதல்!"
– கலீல் ஜிப்ரான்

- எதையும் முடிக்க வேண்டும் என்று மனதால் முடிவெடுப்பதே வெற்றி பெறுவதற்கு முதல் படியாகும். நினைப்பபே நடப்பு. எண்ணமே வாழ்க்கை. பின் இடைவிடாத முயற்சி மூலம் நீங்கள் விரும்பியதை அடையலாம். முதலில் வெற்றி இல்லையானால், முயலுங்கள், முயலுங்கள், மேலும் முயலுங்கள். – வேதாத்திரியம்

# உழைப்பே உயர்வு

''வேலை என்பது காதல் என்பது புலப்படும். நீங்கள் அன்போடு வேலை செய்ய முடியாவிட்டால், வெறுப்புடன் மட்டுமே இருந்தால், நீங்கள் உங்கள் வேலையை விட்டுவிட்டு, கோயிலின் வாசலில் உட்கார்ந்து மகிழ்ச்சியுடன் வேலை செய்பவர்களிடமிருந்து பிச்சை கேட்கிறீர்கள்.'' –கலீல் ஜிப்ரான்

''உழைப்பினால் உடலும் உள்ளமும்
உலகமும் பயன்பெறும் உணர்வீர்!'' (ஞாக.பா.809)

''உழைப்பை முதலாய் வைத்து,
உழுது நெல் விளைவித்து,
தழைத்துள்ள உலகோரைத்
தாய்போன்று காத்து, என்றும்
பிழைத்திருக்கத் தொண்டாற்றும்
பெருந்தகையீர் உங்களை நாம்
அழைக்கின்றறோம்! அறஊற்று!
அன்பு வள்ளல்கள் என்று.'' (ஞாக.பா.759)

# வறுமையும் அறியாமையும்

''வறுமையை விட மனிதனின் அறியாமையே கொடூரமானது.''

–கலீல் ஜிப்ரான்

உலகில் உள்ள வறுமைக்கும் துன்பத்திற்கும் அனைத்திற்கும் காரணம். தெய்வ நிலை, உயிரின் நிலை, அறிவு, உழைப்பு ஆகியவற்றின் மதிப்பை உணர்ந்து, சிலர் தன்னுடைய கடமைகளைச் செய்தும் , பலர் அவற்றை உணராமல் கடமை பிறழ்ந்தும் வாழும் அறியாமையே.'' வேதாத்திரியம்

வேதாத்திரி மகரிஷி தனது நெடிய பயணத்தில் வாழ்க்கை நெறி களை அமைதியாக உணர்த்திச் செல்கிறார். விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் பொருள் வறுமை இல்லவே இல்லை என்கிறார்.

அறிவு வறுமையால், நிரவி வாழாமல் பொருட்கள் தேக்கமும், அவசியமற்ற பொருட்களின் பெருக்கமும், அவசியமான பொருட்கள் மீது அலட்சியமும் ஏற்பட்டப் பொருள் வறுமை போன்ற ஒரு மாயத் தோற்றம் உருவாகி நிலைத்து வருகிறது.

தெய்வ நிலை அறிவால் ஏன் இந்த நிலைகளைச் சீர்திருத்தி உலக மக்கள் வாழ்வில் வளத்தை ஏற்படுத்தக் கூடாது ?

தெய்வத்தை அறிந்து கொண்டால், பல நன்மைகளை உலகுக்குச் சாதித்து விட முடியும். தெய்வ நிலையை உணர்ந்த பிறகுதான் உண்மை விளங்கும்.

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான தெய்வமானது கேட்டால் எதையும் கொடுப்பதில்லை. செய்யும் செயலுக்கு ஏற்றபடித்தான் விளைவைக் கொடுக்கிறது.

நோக்கம், திறமை, காலம், இடம், தொடர்பு கொள்ளும் பொருள் அல்லது நபர் இவ் வையகத்துக்கும் ஏற்ப, ஒவ்வொரு செயலிலும் தக்கபடிச் சிறிது கூடத் தவறாத நீதியோடு விளைவைத் தெய்வம் கொடுக்கிறது.

ஆகவே இந்தத் தெய்வ நீதியைக் கொண்டு மக்கள் குலத்திற்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

எனவே. பொருள் வறுமை என்பது கிடையவே கிடையாது. அறிவு வறுமைதான் இருக்கிறது. அறியாமைதான் இருக்கிறது இதை ஒழித்தால் போதும் பொருள்வளம் மிகுந்துவிடும்.

- நம்பிக்கை வாழ்வில் உந்து சக்தி. நம்பினோர் கெடுவதில்லை. நம்பிக்கை நம்பிக்கையைப் பெற்றுத்தரும். நம்பிக்கையை நாம் பார்க்க முடியாது. அதற்குக் கிடைத்த பரிசைக் கொண்டுதான் அதை நம்புகிறோம். வேதாத்திரியம்
- என் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் பெருமைக்கும் சிறப்புக்கும் உரியவன் என்பதை நம்புகிறேன். வேதாத்திரியம்
- வெற்றியின் மிகக் கடுமையான அம்சம். தொடர்ந்து அதைத் தக்க வைத்துக் கொள்வதே. வெற்றி பெறுவதே எல்லாமுமாய் ஆகிவிடாது. வெற்றி பெறும் விருப்பமும் முக்கியம். வேதாத்திரியம்.
- எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாகத் துன்பம் உங்களைச் செதுக்குகிறதோ, அந்த அளவுக்கு நீங்கள் நிறைந்த இன்பம் பெறுவீர்கள். வெற்றி அடைவீர்கள்.

"என் துன்பத்தின்
ஒரு பகுதியே
சில இன்பங்களின் மீதான
ஆசை
என்பது தான் விசித்திரம்!" – கலீல் ஜிப்ரான்

"இன்பம் துன்பம் என்பதென்ன ? இவையிரண்டும்
எங்கிருந்து தோன்றுகின்ற தென ஆராய்ந்தேன்
இன்பமே இயற்கையிலே எதிலும் என்றும்
எங்கும் நிறைந்துள்ளது. அனு போகத்திற்கு
இன்பத்தின் அளவுமுறை மாறும்போது,
ஏற்படும்ஓர் பொருத்தமிலா உணர்ச்சியே தான்.
இன்பத்தின் மறுபெயராம் துன்பமாயும்,
இரண்டும் அறிவின் அலைகளாயும் கண்டேன்." (ஞாக.பா.1247)

## செயலுக்குத்தான் விளைவு

"மனிதன் செய்கிற குற்றங்களுக்கு கடவுள் ஒருபோதும் எந்த
விதத்திலும் பொறுப்பேற்க மாட்டார்." –கலீல் ஜிப்ரான்

இதைத்தான் வேதாத்திரியம் கூர்தலறம் எனும் செயல்விளைவு நீதி என்று சொல்கிறது.

இறை நிலை எல்லாம் வல்லதும், எங்கும் நீக்கமற நிறைந்துள்ளதுமான பாய்மப்பொருளாகும். இறைநிலையின் தன்மைகள் 'வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம்' என்பதாகும்.

இந்த வளங்கள் நான்கும் பாய்மப்பொருளிலும் உள்ளது. இது புலன்களுக்கு எட்டாத கருத்துருவம்.

'இறைநிலை என்ற பேராற்றலான பாய்மப்பொருள் எந்தப்பொருளிலும், எந்த உருவிலும், எந்த உயிரினத்திலும் நிரம்பி இருக்கிறது. அது அமைந்துள்ள பொருட்கள், தன்மைகள் அலைகளாக அதன்மீது மோதுகின்ற போது உருவாகின்ற விளைவுகளே செயல் விளைவு நீதியாகும்.'

'செயல் விளைவு நீதி எந்த இடத்திலும் சிறிதுகூடத் தவறின்றி அந்தந்த பொருளின் தன்மைக்கேற்ப, தேவைக்கேற்ப உயிரினத்தில் அதன் உணர்ச்சிகள், அனுபோக அனுபவப்

பதிவுகளுக்கேற்பவும் விளைவுகள் இன்பமாகவோ, துன்பமாகவோ, ஊக்கமாகவோ, ஆக்கமாகவோ, வரவாகவோ, செலவாகவோ அளித்துக் கொண்டிருக்கிறது.' – வேதாத்திரியம்

## மனதில் ஒளி வீச வேண்டுமா?

க்ஷநயரவல ளை டேிவ ளை வாந கயஉந; நெயரவல ளை ய டபைாவ ளை வாந ஈநயசவ.

''அழகு முகத்தில் இல்லை இதயத்தின் ஒளி.''!'' – கலீல் ஜிப்ரான்

மனத்தூய்மையும், வினைத்தூய்மையும் – வேதாத்திரியம்

சுத்தவெளியை நோக்கி தவம் செய்து வரும் போது அதுவாகி முடிவில் அதுவே தானுமாகி, தனது அறிவுமாகி உள்ள உண்மை விளங்கும்.

மனம் ஆழ்ந்து எதை நினைக்கிறதோ அதுவாகவே மாறும். அது இயல்பூக்க நியதி.

இறைவெளி வெளியில் நிலைக்கும் போது தானும்–மனமும்–இறைவெளியாக மாறுகிறது.

இதுவரை வாழ்வில் பொருள், புகழ், அதிகாரம்,, புலனின்பத்தில் எல்லைக்கட்டிப்பழகிய மனத்தை விரித்து, பேரியக்க மண்டலம் முழுவதையுமே, தனக்குள் அடக்கிக்கொள்ளும் வகையில் மனம் விரிந்து, பின்னர் அதையும் கடந்து சுத்தவெளியாகிய தனது மூலத்தோடேயே நிலைபெறப் பழக பழக மனத்தூய்மையும், வினைத்தூய்மையும் மனிதனுக்கு கிடைக்கின்றன

ஆன்மாவும் அங்கமும் நலம் பெற

''என்
ஆன்மாவும் அங்கமும்
ஒன்றோடொன்று
காதலித்துக்
கடிமணங் கொண்ட போது
நான் இரண்டாவது பிறப்புற்றேன் !'' கலீல் ஜிப்ரான்

உடல்நலமே முதல் நலம். உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் அதில் வசிக்கும் உயிரும் ஆன்மாவும் நலம் பெறும்.

இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்று ஓட்டம் இந்த மூன்றையும் ஒழுங்காக இருக்குமாறு காப்பாற்றிக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. உடல்நலமாக இருந்தால்தான் மனம்

வளமாக இருக்க முடியும். வேதாத்திரியம்

''உடல்நலம் அறிவின் உயர்வுமே பெருநிதி
கடமையின் சிறப்பே களங்கமிலா வாழ்வு.'' (ஞாக.பா.401)

''உடலுக்கு உரமளிக்கும் உழைப்பு,
ஒழுங்கோடு கொள்ளும் உணவு,
உளத்திற்கு உயர்வளிக்கும் கல்வி,
உள்நாடி நிற்கும் தவம்.'' (ஞாக.பா447. )

## எங்களிடமும் அன்பு செலுத்துங்கள்

And god said " Lovbe Your Enemy." And Iobeyed him and loved myself

உங்கள் எதிரிகளிடமும் அன்பு செலுத்துங்கள். அவர்களுக்கு கீழ் படியுங்கள். கலீல் ஜிப்ரான்

எதிரிகளையும் வாழ்த்த சொல்லுவது வேதாத்திரியம்

தமக்குத் தீங்கு செய்தாரைத் தண்டிக்கும் முறையாவது தீமை செய்தவர் வெட்கப்படும் அளவுக்கு நன்மையைச் செய்வதுடன் அவர் செய்த தீமையயும் தாம் செய்த நன்மையையும் மறந்து விடுதலாகும்.

பிறர் செய்த தீமையை நினைப்பதால் பகைமை உணர்வும், தாம் செய்த நன்மையை நினைப்பதால் தன் முனைப்பும் துளிர்க்கும். அதனால் மறந்து விடுக என்றார்.

உளவியல் அடிப்படையில் ஒருவரைத் திருத்த, உடன்பாட்டு முறையிலே அணுகுதல் வேண்டும்.

பழிவாங்கும் உணர்வில் நின்ற ஒருவனை ''ஒறுத்தல்'' ''நாண'' என்ற சொற்களின்வழி, பழி வாங்குதலுக்கு உடன்பட்டு நிற்பார் போலக் காட்டி அவன் வெகுளியைத் தணிய வைத்துப் பின் நன்னயம் செய்யும் நெறியில் ஆற்றுப்படுத்தும் நிலையில் இக்குறள் அமைந்திருப்பதைக் காணலாம்..

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நாண நன்னயம் செய்துவிடல்

பகைவனுக்கும் அருள்வாய் என்கிறார் பாரதி. பகை நடுவினில் பரமன் வாழ்கின்றான் என்கிறார் பாரதி.

''பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே!
பகைவனுக் கருள்வாய்!
புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோ மே—நன்னெஞ்சே!
பூமியிற் கண்டோ மே.
பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் —நன்னெஞ்சே!'' (பாரதியார்)

வேதாத்திரியத்தில் பகைவர்களையும் வாழ்க வளமுடன் என வாழ்த்தும் பயிற்சி வழங்கப்படுகிறது.

## வாழ்த்து

''வாழ்க வாழ்கவென் வாழ்க்கைத் துணைவர்
வாழ்க வாழ்கவென் குழந்தைகள் எல்லாம்
வாழ்க வாழ்க என்னுடன் பிறந்தோர்கள்
வாழ்க வாழ்கவென் நண்பர்கள் அனைவரும்
வாழ்க வாழ்கவென் தொழில்துறை அனபர்கள்
வாழ்க பகைவர்கள் வளமொடு திருந்தி
வாழ்க இவ்வுலகில் வாழ் மக்களெல்லாம்
வாழ்க வாழ்க இவ்வையகம் வாழ்க
வாழ்க அறநெறி வாழ்க மெய்ஞ்ஞானம்!'' (ஞாக.பா.1500–8)

## நமக்கு தீமை செய்தவர்களையும் ஏன் வாழ்த்த வேண்டும்?

வாழ்த்தும் போது தெய்வீக நிலையில், அமைதி நிலையில் இருந்து கொண்டு வாழ்த்த வேண்டும்.

இந்த முறையில் வாழ்த்தின் மூலம் உலகத்தையே மாற்றி அமைத்து விடலாம்.

நமக்குத் தீமை செய்தவரையும் ஏன் வாழ்த்த வேண்டும் என்றால், ''அவர் அறியாமையினாலே தான் அவ்வாறு செய்தார், நம்முடைய கர்மச் சுமையின் விளைவு அவரைத் தீமை செய்ய இயக்கியது.''

எனவே அவர் செய்தார், அவருக்கு உள்ளாக இயங்கிக் கொண்டிருப்பதும் எல்லாம் வல்ல முழுமுதற் பொருளே.

எனவே, அவரை மனதார வாழ்த்தி எனது தீய பதிவு ஒன்றை அகற்ற உதவிய அவருக்கு நன்றியும் செலுத்துவேன்'' என்ற தத்துவ விளக்கம் நம் செயலுக்கு வந்து இயல்பாகி விட்டதென்றால், நாம் ஆன்மீகப் பாதையில் திடமாக முன்னேறிச் செல்கிறோம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும்.

வாழ்க பகைவர்கள் எதிரிகள் என்று வாழ்த்த வாழ்த்த என்ன நிகழும் தெரியமா ?

வாழ்த்து எல்லா மந்திரங்கட்கும் மேலான திருமந்திரமாகும். ஒருவரை நாம் வாழ்த்தும் போது அந்த உயிருக்கும் நம் உயிருக்கும் ஒரு உயிர்த் தொடர்பு – சங்கிலித் தொடர்பு ஏற்பட்டு வாழ்த்து அதன் மூலம் பாய்ந்து வேலை செய்யும். ஒருவரை நாம் வாழ்த்தும் தகுதியைப் பெறுகிறோம்.

அந்த அளவுக்கு நமது பெருந்தன்மை தானே வளர்ச்சியடைகிறது. இந்த வாழ்த்து பேரறிவில் பதிவாகி அதன் மூலம் அடி மனத்திற்கும் பரவி நாளாக நாளாக நட்புணர்ச்சி வளர உதவும். வெறுப்புணர்ச்சி தானே மறைந்துவிடும்.

வாழ்க வளமுடன் என்ற மந்திரத்திற்கு வலு அதிகம். தவம் செய்து முடிக்கும் போது சொல்லும் வாழ்த்துக்கு இன்னும் வலிமை கூடுகிறது.

உதாரணமாக ஒரு வில்லில் அம்பு எய்வதற்கு எவ்வளவு தூரம் நாணை இழுக்கிறோமோ, அந்த அளவுக்கு அம்புக்கு வேகம் கூடும். அதுபோன்று மனம் எவ்வளவு அமைதி நிலையிலிருந்து வாழ்த்துகிறதோ அந்த வேகத்தில் அந்த வாழ்த்து செயலுக்கு வரும்.

வாழ்த்து என்பது வெறும் சொல் மட்டுமல்ல. அது ஒரு ஜீவகாந்த அலை. இந்த அலைக்கு ஐந்து வகையான இயக்கங்கள் உள்ளன.

1 மோதுதல் (Clash)

2 பிரதிபலித்தல் (Reflection)

3 சிதறுதல் (Refraction)

4 ஊடுருவதல் (Penetration)

5 இரண்டிற்கும் இடையே ஓடிக் கொண்டிருத்தல் (Interaction)

ஒருவர் மற்றவரை வாழ்த்தும்போது அந்த வாழ்த்து இருவருக்கிடையே இந்த வகையான அலையினை எழுப்பிவிடும். அவர் உங்களை பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் அவரது உயிரிலிருந்து நன்மையான அலை வீசிக் கொண்டே இருக்கும்.

சமுத்திரத்தின் மத்தியில் தோன்றும் அலை கரையைத் தொடுவது போல் வாழ்த்துபவரிடம் சென்று மீளும். வாழ்த்தும் போது நாம் அன்பையும் நல்லெண்ணங்களையும் விதைத்தால், நாம் வாழ்த்தியவரிடம் அதனைக் கொண்டு சேர்க்கும் வாழ்த்து அலை, அதனை மீளக் கொண்டு வருகையில் அதனை மேலும் விரிவாக்கி நமக்குக் கொண்டு வந்து சேர்க்கும்.

இதனால் நமது பகைவர்களும் நமக்கு தீமை செய்தவர்களும் மனம் மாறி நம்முடன் இணக்கமாக இருப்பார்கள்.

ஒற்றுமையின்றி பிணங்கி நிற்கும் ஒரு மகனைத் தந்தை தினசரி வாழ்த்திக் கொண்டே இருப்பாரானால் இருவருக்கும் இடையேயுள்ள உயிர்த் தொடர் மூலம் அவ் வாழ்த்துப் பரவி மகனுடைய மூளையில் பதிந்து அவனைச் சிறுகச் சிறுகத் திருத்தி தகப்பன் விருப்பப்படி நடக்கும்படி செய்துவிடும்.

கணவன் மனைவியிடையேயும் இப்படித்தான். இது நான் அனுபவமாக பல குடும்பங்களில் கண்ட உண்மையாகும்.

வாழ்த்தின் மூலம் தேவையான நன்மைகளும் கிட்டும். ஆதலால்தான் கடவுளைக் கூட வாழ்த்தும் பக்தர்களையும் பக்திப் பாடல்களையும் நாம் பார்க்கிறோம்.

கடவுளை வாழ்த்துவதன் மூலம் எல்லோரையும் வாழ்த்தும் நற்பழக்கத்தை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான். இதனால் ’மனவளம்’ பெருகுவது நிச்சயம்.

# நம் குழந்தைகளே

—உங்கள் குழந்தைகள் உங்களுடையது அல்ல; அவர்கள் வாழ்க்கையின் குழந்தைகள், இது

ஆர்வத்துடன் தன்னைத் தேடுகிறது. அவர்கள் உங்களிடமிருந்து இந்த உலகத்திற்கு வருகிறார்கள், ஆனால் உங்களிடமிருந்து அல்ல; எங்களுடன் வாழ்ந்தாலும், அவை உங்கள் சொத்து அல்ல'' கலீல் ஜிப்ரான்

''என் குழந்தைகள் என்பதற்குப் பதில் நம் குழந்தைகள் என்போம்'' என்கிறது வேதாத்திரியம்.

''பாலைவனம் போலாகும் மனது. மக்கள்
பாசமின்றேல்'' என்போர்க்குப் பதில் இங்குண்டு,
மாலை நேரங்களிலே எவரென்றாலும்,
மழலை மொழிக் குழந்தைகளி ?ன் இருப்பிடம் ஆம்''
சோலை சூழ் நிலையங்கட்கென்றும் சென்று,
சுதந்திரமாய்க் குழந்தைகளோ டாடலாகும்,
காலையிலும், விருப்பமுள்ளோர் ஓய்வு நாளில்
களிப்படையலாம் சின்னஞ்சிறுவரோடு, **(உலக.சமா.பா.87)**

## மதம் மதம் மதம்

மதம் என்பது தத்துவங்களைச் சொல்லும் பாடம் அல்ல. அது ஒரு கவிதை. மர்மங்களை வெளிப்படுத்தும் சாதுர்யம் நிறைந்த கவிதை

''கைகள் கலலைச் செதுக்கினாலும், தறியை நெய்தாலும் செய்யும் தொழிலே மதம்''

நாம் எந்த வேலையை வேண்டுமானலும் செய்து கொண்டிருக்காலம். ஆனால் மனம் அதில் லயித்து தியானத்தில் இருக்கட்டும். வேதாத்திரி மகரிஷி துணி நெய்ததைப் போல!

சமைப்பது, துணி துவைப்பது வீட்டைப் பெருக்குவது என்ற எல்லா தொழிலுமே ? மதம்தான் என்கிறார் கலீல் கிப்ரான்

# மதத்தின் பயன் வேதாத்திரியம்

''அறுகுணத்தை அளவோடு அடக்கி ஆண்டு,
அறம் பொருள் இன்மொடு வீடுபேறு,
பெறுவதற்கு உடல்உள்ள ஒழுக்கம் காட்டி,
பேரறிஞர் வகுத்தமுறை மதமாம் காணீர்!'' (ஞாக.பா.501)

# இன்ப துன்பங்களை ஒழுங்குபடுத்தவே மதங்கள்

''ஆதிமனி தன்வாழ்ந்த காலம் தொட்டு
அணுசக்தி கண்டுவிட்ட இந்நாள் மட்டும்
சாதித்த காரியங்கள் அனைத்தும் சேர்த்து
சகலவிதத்தும் பகத்துப் பிரித்தா ராய்ந்து
சோதித்தால், இன்பதுன்பம் இரண்டே காண்போம்.
துன்பத்தைக் குறைத்திடவே முயன்ற நல்லோர்
போதித்த வாழ்க்கை ஒழக் கங்கள் எல்லாம்
புண்ணிய பாவம் தொகுத்த மதங்கள் ஆகும்'' (ஞாக.பா.513)

# நல்ல மனப்பான்மை பெற

உங்கள் வாழ்க்கை தீர்மானிக்கப்படுவது அது உங்களைக் கொண்டுவருவதன் மூலம் அல்ல, மாறாக நீங்கள் உயிர்ப்பிக்கும் மனப்பான்மையால். இது உங்களுக்கு என்ன நடக்கிறது என்பதல்ல, என்ன நடக்கிறது என்பதை உங்கள் மனம் பார்க்கும் விதம். – கலீல் கிப்ரான்

# நல்ல மனப்பான்மை பெற என்ன செய்ய வேண்டும்?

''தவத்தின் மூலமாக மனத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டால், நுண்மைப்படுத்திக் கொண்டால், திடப்படுத்திக் கொண்டால், மனத்திண்மை (வில் பவர்) என்று சொல்லக்கூடிய ஒரு ஆற்றலைப் பெற்றுக் கொண்டால், இவ்வுணர்வுகளை கொண்டு சிந்தனை செய்யச் செய்ய நமக்குளளாக உள்ள குறைபாடுகளை உணர்ந்து கொள்ள முடியும். நல்ல மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள முடியும். – வேதாத்திரியம்

# வாழ்க்கையும் மரணமும்

''நதியும் கடலும் ஒன்றாக இருப்பதைப் போலவே வாழ்க்கையும் மரணமும் ஒன்றாகும்.'' – கலீல் கிப்ரான்

வேதாத்திரியம் என்ன சொல்கிறது ?

- மனித வாழ்க்கை என்பது இறைநிலையை நாடிய அறிவின் பயணம்.
- உடலுக்கும் உயிருக்கும் உறவு நீடித்தால் வாழ்க்கை என்கிறோம்.
- வாழ்க்கை சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசை. ஒன்று தொண்டு. மற்றொன்று அன்பு.
- செயல்ஒழுக்கம், சேவை, சிந்தனை, சீர்திருத்தம், சிக்கனம் இவை ஐந்தும் செழிப்பான வாழ்வளிக்கும்.
- உடல்நலம் அறிவின் உயர்வுமே பெருநிதி. கடமையின் சிறப்பே களங்கமிலா வாழ்வு.

''மரணத்தை நினைத்து அஞ்சி நடுங்கும் கோழை
மனிதனோ அன்றேது ? யாவ ரேனும்
மரணம் அடைந்தோர் சவத்தைப் பார்த்துப் பார்த்து
மனங்கலங்கி. உளம்உருகி, அழுவா ரேது ?
''மரணம்தான் ஜீவஇனம் இன்ப துன்ப
மாகடலைத் தாண்டும்உயர் நிகழ்ச்சி'' என்று,
மரணத்தின் நிலையறிந்து. அதற்கு அஞ்சா
மனநிலையில், தெளிவுடனே வாழ்வார் மக்கள்.''

(ஞானக்களஞ்சியம் பாடல்100.)

- கலீல்ஜிப்ரானும் வேதாத்திரி மகரிஷியும் மண்ணுக்கும் விண்ணுக்கும் இணைப்பை ஏற்படுத்திய மெய்ஞ்ஞானிகள.
- இருவருமே ...ஆன்மாவின் அடிமைத் தளையை உடைக்க வீறு கொண்டு எழுந்தவர்கள்.
- இருவரும் தம் கவிதைகளினால் தரணியைத் தட்டி எழுப்பியவர்கள்.
- இருவருமே தமது கவிதைகளில் துருபிடித்த வார்த்தைகளைத் தூரத்தள்ளியவர்கள்.

- கலீல்ஜிப்ரானும் மகரிஷியும் சமய சமரசவாதிகள்.
- கலீல்ஜிப்ரானும் மகரிஷியும் சமுதாய சீர்திருத்தவாதிகள்
- கலீல்ஜிப்ரானும் மகரிஷியும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினர்.
- இருவருமே இணையற்ற ஆன்மீக மேதைகள். தத்துவஞானிகள்
- வாழ்க்கை தத்துவத்தை எளிமையாக எடுத்துணர்த்தும் கலீல்ஜிப்ரானும் தத்துவ விளக்கங்கள்/ கவிதைகள் ஏராளம். வேதாத்திரியம் முழுவதுமே வாழ்க்கைத் தத்துவங்கள்தான்.
- ஒரு யுக விழிப்பை ஏற்படுத்தியவர்கள் கலீல்ஜிப்ரானும் வேதாத்திரி மகரிஷியும்

## துணைநின்ற நூல்கள்


- ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியப் பதிப்பகம், ஈரோடு
- வேதாத்திரியத் தத்துவங்கள் மன்னார்குடி பானுகுமார், இணையதளம் www.banukumar.in
- வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
- இணையதள தகவல்கள்
- முறிந்த சிறகுகள், கலீல் ஜிப்ரான், கண்ணதாசன் பதிப்பகம்
- பைத்தியக்காரன், கலீல் ஜிப்ரான், கண்ணதாசன் பதிப்பகம்
- The Prophet by Kahlil Gibran
- COMPLETE WORKS OF KHALIL GIBRAN
- The Voice of the Master KHALIL GIBRAN




## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்

4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஒய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை ! சரியா ? தவறா ? இலக்கணம் என்ன சொல்கிறது ?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

22. வேதாத்திரியம் கற்போம்

23. மனைவிக்கு மரியாதை

24. எல்லாம் வல்ல தெய்வமது

25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.

26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

28. வேதாத்திரியத்தில் அறம்

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரிஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஶ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா ?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா ? அரசியல் ஞானியா ?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்

14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள் ?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது ? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன் ?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா ?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார் ?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## வரலாறு மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. மன்னார்குடி வரலாறு

## பயண நூல்கள்

1. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே !
2. அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## பானுகுமார் படைப்புலகம்

1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க

4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் (மானுடம் வென்றதம்மா)

## உலகப் புகழ்பெற்ற தத்துவஞானிகளும்

## வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு இலக்கியம்)

1. லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும்
2. ஹிப்பாக்ரட்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
3. ஹென்றிவேர்ட்ஸ்வொர்த் லாஜ்பெலோவும் வேதாத்திரி மகரிஷியும்
4. பெர்ட்ராண்ட் ரசல்லும் வேதாத்திரி மகரிஷியும்
5. கலில் ஜிப்ரானும் வேதாத்திரி மகரிஷியும்
6. கன்பூசியனிசமும் வேதாத்திரி மகரிஷியும்
7. தஸ்தயேவ்ஸ்கியும் வேதாத்திரி மகரிஷியும்
8. ஜலாலுதீன் ரூமியும் வேதாத்திரி மகரிஷியும்
9. லாவோசும் வேதாத்திரி மகரிஷியும்
10. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும்
11. சாக்கரட்டிஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
12. அரிஸ்டாடிலும் வேதாத்திரி மகரிஷியும்
13. பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும்
14. செனகாவும் வேதாத்திரி மகரிஷியும்
15. மிர்தாவின் புத்தகமும் வேதாத்திரியமும்

16. நீட்சேயும் வேதாத்திரி மகரிஷியும்
17. சர் ஐசக் நியூட்டனும் வேதாத்திரி மகரிஷியும்
18. வால்டேரும் வேதாத்திரி மகரிஷியும்
19. ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரி மகரிஷியும்
20. சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரஷியும்.
21. காரல் மார்க்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
22. இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரியும்.
23. சிகமண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிஷியும்.
24. ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிஷியும்.
25. ஐன்ஸ்டைனும் வேதாத்திரி மகரிஷியும்
26. கன்பூசியஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
27. பெஞ்சமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
28. ரூஸ்வெல்டும் வேதாத்திரி மகரிஷியும்
29. வேட்ஸ்வொர்த்தும் வேதாத்திரி மகரிஷியும்
30. மில்டனும் வேதாத்திரி மகரிஷியும்

Youtube channel Name – vethathiriam Banukumar

Face book group வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்